**ஓம் ஶ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்**
**வினா விடை நேரம்**
**வினா எண் 341**
**தலைப்பு "கடவுளுக்கு நெருக்கமாக இருப்பது எப்படி"**

*நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் இறைவனை உட்புறமாக தேடுதல் என்ற புத்தகத்தின் பக்கம் 33-39 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி*

கேள்வி:இறைவனிடத்தில் நெருங்கி இருப்பது எவ்வாறு.

பதில்-அனில்குமார் சார்:
இது ஒரு நல்ல கேள்வி.மேலோட்டமாக ஒரு அர்தத்தையும் பின்னர் வேறு ஒரு பரிமாணத்தையும் இது கொடுக்கிறது.
இதை பற்றி பேசும் போது இரண்டு படிகளை நாம் பார்க்கலாம்.
முதலாவது நம் பகவான் கூறியுள்ளபடி கடவுளுக்கு நெருக்கமாக வர வேண்டும் என்றால் நாம் கடவுள்மீது நிபந்தனையற்ற அன்பு செலுத்த வேண்டும்.
அன்பு செலுத்த வேண்டும் என்பது சரி.ஆனால் நிபந்தனையற்ற அன்பு என்பது மிக கடினம்.
ஏனெனில் நமக்கெல்லாம் எப்போதும் கடவுளிடத்தில் ஏதாவது ஒரு கோரிக்கை இருந்து கொண்டே இருக்கிறது.
நமது மனம் ஆசைகளும் விருப்பங்களும் குறிக்கோள்களும் நிறைந்ததாக உள்ளது.
இப்படிபட்ட மனதுடன் நிபந்தனையற்ற அன்பு செலுத்துவது மிக கடினமானது.
இரண்டாவதாக கடவுளிடத்தில் முழு நம்பிக்கை கொள்ள வேண்டும்.
ஆனால் வருத்தமான விஷயம் என்னவென்றால் நம்முடைய கோரிக்கை நிறைவேறவில்லை என்றால் நம் கடவுள் நம்பிக்கை ஆட்டம் கண்டு விடுகிறது.எனவே முழு நம்பிக்கை வைப்பது என்பதும் மிக கடினமானதுதான்.
மூன்றாவதாக கடவுளின் போதனைகளை வாழ்க்கையில் கடைபிடிப்பது.
ஏசு கிறிஸ்துவின் போதனைகளை அவருடைய சீடர்கள் கடைபிடித்தார்கள்.பகவான் ஶ்ரீ கிருஷ்ணரின் அறிவுரையை அர்ஜுனன் கடைபிடித்தார்.

எனவே கடவுளின் அறிவுரைகளை நடைமுறை வாழ்க்கையில் செயல்படுத்துவது என்பதும் கடவுளிடம் நெருங்கி செல்வதற்கு அவசியமானதாகும்.

நான்காவதாக நமது வாழ்க்கையில் வரும் சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகள் அனைத்தும் இறைவன் கொடுப்பதாகவே அதாவது இறைவனின் பிரசாதமாக ஏற்று கொள்கின்ற மனப் பக்குவத்தையும் பெற வேண்டும்.அது இனிப்பானதாகவும் இருக்கலாம் கசப்பானதாகவும் இருக்கலாம்.
இது போன்று அடிப்படை பண்புகள் இருந்தால் தான் இறைவனிடத்தில் நெருங்கி வர இயலும்.

இப்போது அடுத்த உயர்ந்த பரிமாணத்தை பார்ப்போம்.
இதோ இங்கே ஒரு பைஃல் இருக்கிறது.
அது என்னைவிட்டு சற்று தள்ளி இருக்கிறது.
அது என்னருகில் வரவேண்டுமென்றால் யாராவது அதை எடுத்து என்னிடம் தர வேண்டும். அல்லது நான் எழுந்து அதனிடத்தில் போக வேண்டும்.
கடவுளுக்கு அருகில் என்று சொல்லும் போதே எனக்கும் கடவுளுக்கும் இடையில் இடைவெளி இருப்பதாகத்தானே அர்த்தம்.
அதாவது காலம் மற்றும் இடம் இவைகளே அந்த இடைவெளியை தீர்மானிக்கின்றன.
ஆனால் இந்த கேள்வியை மாற்றி ஐயா எனக்கு அருகில் நானே எப்படி செல்வது என கேட்டுப் பாருங்கள்.
இதற்கு என்ன அர்த்தம்.நான் உடல்.நான் மனம்.நான் புத்தி.ஆனால் உண்மையான நான் இந்த மூன்றையும் கடந்தவன்.
என் உடலை மறைக்க நான் உடுத்தியிருக்கும் ஆடைகளை போல உடல் மனம் புத்தி என்பதெல்லாம் ஆன்மாவை மறைக்கும் ஆடைகளாகும்.
இந்த மேல்புற போர்வைகளெல்லாம் வெங்காயத்தை மூடியிருக்கும் தோலிகளை போல உறித்தெரியப்பட வேண்டும்.
முதலில் உடல் உணர்வு அடுத்து நான் மனம் என எண்ணுவது பிறகு புத்தி இவைகளை ஒவ்வொன்றாக வெளியேற்றினால் இறுதியில் நிற்பது ஆத்மன் மட்டுமே.
ஆக கடவுளிடம் நெருங்கி வருவது என்றால் நான் உடலல்ல.நான் ஆத்மாவே என்ற பேருணர்வை பெறுவதாகும்.
கோவிலுக்கு எதற்காக செல்ல வேண்டும்.கோவிலிலுள்ள கடவுளும் நானும் ஒன்றே என்ற பேருணர்வை பெறுவதற்காகத்தான்.எதற்காக நான் உடலை சிரமப்படுச்தி கொண்டு கோவிலுக்கு செல்ல வேண்டும்.என் உடலுக்கு இது போன்ற பயிற்சிகளை கொடுத்து வருத்தும் போதுதான் நான் உடலல்ல என்ற புரிதல் உண்டாகும்.

நாம் கோவிலுக்கு செல்வது சடங்கு சம்பிரதாயங்களை கடைபிடிப்பது ஆன்மீக பயிற்சிகளில் ஈடுபடுவது எல்லாமே நானும் இறைவனும் ஒன்றே என்பதை புரிந்து கொள்ளத்தான்.
கடவுளை நெருங்கி வருவது என்பது நாமும் தெய்வமும் ஒன்றே என நம் உள்ளேயே உணரத்துவங்கும் போது தான்.அதாவது உடல் பற்றை கடந்து செல்லும் போது தான்.அது போல் அகந்தையை முற்றிலுமாக ஒழித்து நான் மனமல்ல என்ற உண்மையை உணர வேண்டும்.
புத்தி என்பது அடுத்தவர்களின் குறைகளை பார்க்க வைத்து நம்முடைய குறைகளை மறைத்து விடுகிறது.எனவே புத்தியையும் கடந்து செல்ல வேண்டும்.

ஆனால் நண்பர்களே இவை மூன்றையும் கடந்து செல்வது என்பது மிக கடினமானதாகும்.
இவை மூன்றும்தான் நம்மை கடவுளிடமிருந்து பிரித்து விடுகின்றன.

கடவுளுக்கு நெருங்கியவராக இருப்பது எவ்வாறு.
முதலில் உடல் உணர்வை தாண்டி வாருங்கள். பின் உளவியல் ரீதியாக மனதை தாண்டுங்கள்.
பின்னர் பகுத்தறியும் புத்தியையும் தாண்டுங்கள்.

அப்போது நானே அது என்பது புரிந்து விடும்.அவ்வளவு தான்.
நானும் இறைவனும் ஒன்றே.வேறு வேறு அல்ல என்ற நிலையை அடைவதே இறைவனை நெருங்கியிருப்பதாகும்.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்.
ஜெய் சாயிராம்